**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம் II பரீட்சை – ஜூலை 2024

**(Level II Examination – July 2024)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

## (204) வணிக முகாமைத்துவம் (BMA)


**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669



கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்
# மட்டம் II பரீட்சை – ஜூலை 2024
# (204) வணிக முகாமைத்துவம்
# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 25 புள்ளிகள்) **பகுதி - A**

## *வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**1.1** (3)

**1.2** (2)

**1.3** (1)

**1.4** (3)

**1.5** (2)

***(02 புள்ளி வீதம் 10 புள்ளிகள்)***

**1.6** எண்ணக்கருசார்

**1.7** நடைமுறைப்படுத்துதல்

**1.8** தூரநோக்கு

**1.9** தெளிவினை

**1.10** பயனுறுதித்தன்மை

***(01 புள்ளி வீதம் 05 புள்ளிகள்)***

**1.11.** கீழே உள்ளவற்றில் ஏதேனும் இரு காரணங்களைக் குறிப்பிடுதல் முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்

1. தொழிநுட்ப சீர்குலைவு
2. உலகமயமாக்கல்
3. பொருளாதார நிச்சயமற்ற தன்மை
4. திறன் முகாமை
5. நிலைபேறானதன்மை மற்றும் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (CSR)
6. முகாமையின் பல்வகைமை
7. தரத்தின் முக்கியத்துவம்
8. சேவைப் பொருளாதாரங்களை நோக்கி மாற்றமுறுதல்

***(02 புள்ளிகள்)***

**1.12.** உற்பத்தித்திறன் என்பது பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்ய நேரம், உழைப்பு மற்றும் மூலதனம் போன்ற வளங்களைப் பயன்படுத்தும் திறனைக் குறிக்கிறது. இது ஒரு அலகு உள்ளீட்டுக்கு உருவாக்கப்படும் வெளியீட்டின் அளவீடு ஆகும்.

உற்பத்தித்திறன் = (மொத்த வெளியீடு) / (மொத்த உள்ளீடு) X 100

***(02 புள்ளிகள்)***

**1.13**
1. உற்பத்தி
2. விலை
3. இடம்
4. மேம்படுத்தல்

***(02 புள்ளிகள்)***

**1.14**

1. மாற்ற முகாமை என்பது வெளிவாரி மற்றும் உள்ளக அக்கறைதாரர்களின் மாறிவரும் தேவைகளுக்கு சேவை செய்வதற்காக, ஒரு நிறுவனத்தின் இயக்கம், கட்டமைப்பு மற்றும் திறன்களை தொடர்ந்து புதுப்பிக்கும் செயன்முறையாகும்.
2. மாற்ற முகாமை என்பது தேவையான வணிக முடிவை அடைவதற்காக மாற்றத்தின் மக்கள் பக்கத்தை முகாமை செய்யும் செயன்முறை, உத்திகள் மற்றும் நுட்பங்கள் ஆகும்.
3. மாற்ற முகாமை என்பது, திட்டமிட்டு, முறையாக அறிமுகம் செய்வதன் மூலம் மாற்றத்தை சீரான நடைமுறைப்படுத்தலை அடைவதாகும்.
4. மாற்ற முகாமை என்பது ஒரு நிறுவனத்தின் இலக்குகள், செயன்முறை மற்றும் தொழிநுட்பங்களின் மாற்றம் அல்லது மாற்றத்தைக் கையாள்வதற்கான ஒரு முறையான அணுகுமுறையாகும்.

aat SRI LANKA

***(02 புள்ளிகள்)***

**1.15** பின்வரும் காரணங்களில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பிடுவது முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்

1. நிச்சயமற்ற தன்மை
2. கட்டுப்பாட்டு இழப்பு / இழப்பு உணர்வு
3. நம்பிக்கை இல்லாமை
4. அதிகரித்த பணிச்சுமை
5. முந்தைய எதிர்க்கணிய அனுபவங்கள்
6. மாறுபட்ட உணர்வுகள் (மாற்றத்தின் தன்மை பற்றிய புரிதல் இல்லாமை)

***(02 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

*பிரிவு **A** முடிவு*

## வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

| | |
|---|---|
| *அத்தியாயம் 01 –* | *முகாமைக்கான அறிமுகம் மற்றும் முகாமை பற்றிய வேறுபட்ட கண்ணோட்டங்கள்* |
| *அத்தியாயம் 02 –* | *முகாமைத்துவ செயன்முறையின் தொழிற்பாடுகள் - திட்டமிடல்* |
| *அத்தியாயம் 02 –* | *முகாமைத்துவ செயன்முறையின் தொழிற்பாடுகள் - நிறுவனக் கட்டமைப்பு மற்றும் வடிவமைப்பு* |

**(a)**

திட்டமிடல் என்பது இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் அந்த இலக்குகளை அடைய தேவையான உத்திகளை வரையறுத்தல் மற்றும் படிகளைக் கோடிட்டுக் காட்டுதல் ஆகும். இது எதிர்கால தேவைகளை முற்துணிதல் மற்றும் விரும்பப்பட்ட விளைவுகளை அடைவதற்கான சிறந்த நடவடிக்கையை தீர்மானிப்பது ஆகியவற்றை உள்ளடக்கும். வினைத்திறனான திட்டமிடலானது வளங்களை ஒழுங்கமைக்கவும், முயற்சிகளை ஒருங்கிணைக்கவும், ஒரு நிறுவனம் அல்லது திட்டத்தை வெற்றியை நோக்கி வழிநடத்தும் தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ளவும் உதவும்.

*(02 புள்ளிகள்)*

**(a)** கீழே உள்ள ஏதேனும் மூன்று காரணங்களை விளக்குதல் முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்.

| **தீர்மானம் மேற்கொள்ளல் கட்டங்கள்** | **தகவலின் வகிபாகம்** |
|---|---|
| பிரச்சினை அல்லது வாய்ப்பைக் கண்டறிதல் மற்றும் கட்டமைத்தல் | ஒரு பிரச்சினையைக் கண்டறிந்து அதை ஒரு கட்டமைக்கப்பட்ட முறையில் முன்வைக்க தகவல் அவசியமாகும். ஒரு பிரச்சனை அல்லது வாய்ப்பு பற்றிய தகவல்களின்றி, தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறை ஆரம்பிக்கக்கூட முடியாது. |
| பிரச்சினையைப் பகுப்பாய்வு செய்தல் | பிரச்சினை ஏற்பட்ட சூழல் பற்றிய தகவலின்றி, அதுபற்றிய எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ள முடியாது. ஒரு வகையில், சூழல் பற்றிய தகவல் பிரச்சினையை வரையறை செய்யும். |
| மாற்று வழிமுறைகளை உருவாக்குதல் | தீர்மானம் மேற்கொள்ளலுக்கான மாற்று வழிமுறைகளை உருவாக்குவதில் தகவல் ஒரு முக்கிய அங்கமாகும். பயனுறுதிமிக்க மாற்று வழிமுறைகளை அடையாளம் காணும் வகையில் தகவலை உருவாக்க முகாமையாளர்கள் வெவ்வேறு மட்டங்களில் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும். மாற்று வழிகளை உருவாக்கு, சாத்தியமான தீர்வுகள் பற்றிய தகவல்களைக் கொண்டிருப்பது அவசியமாகும். |
| சிறந்த மாற்று வழிமுறையின் தெரிவு | மாற்றுத் தீர்வுகளின் பொருத்தப்பாடு பற்றிய தகவலின் அடிப்படையில், சிறந்த மாற்றீட்டைத் தெரிவு செய்யும் செயன்முறை இடம்பெறுகிறது. ஒவ்வொரு தெரிவையும் |

| | |
|---|---|
| | மதிப்பீடு செய்ய, அவற்றில் சிறந்ததைத் தேர்ந்தெடுக்க முகாமையாளர்களுக்குத் தகவல் வரிசைகள் காணப்படல் வேண்டும். |
| செயற்திறன் மதிப்பீடு | தகவல் விளைவுகளையும் செயல்திறனையும் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் அனுமதிப்பதுடன், தீர்மானம் மேற்கொள்பவர்கள் தமது தெரிவுகளின் பயனுறுதியை மதிப்பிடவும் தீர்மானங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்யவும் உதவுகிறது. |

***(06 புள்ளிகள்)***

**(b)** கீழே உள்ள காரணங்களில் ஏதேனும் ஒன்றை அடையாளம் காணுதல் முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்

1. மேம்படுத்தப்பட்ட கவனம்
2. அதிகரித்த நெகிழ்வுத்தன்மை
3. மேம்படுத்தப்பட்ட பொறுப்புக்கூறல் (கணக்களிதகமை)
4. சிறந்த வள ஒதுக்கீடு
5. வேகமான தீர்மானம் மேற்கொள்ளல்
6. விரிவாக்கம் மற்றும் வளர்ச்சி
7. மேம்படுத்தப்பட்ட நிறுவனத்தின் கலாச்சாரம்
8. அதிகரித்த வினைத்திறன்

***(02 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

aat SRI LANKA

***அத்தியாயம் 02 - முகாமைத்துவ செயன்முறையின் தொழிற்பாடுகள் - நிறுவனக் கட்டமைப்பு மற்றும் வடிவமைப்பு***
***அத்தியாயம் 02 - முகாமைத்துவ செயன்முறையின் தொழிற்பாடுகள் - நிறுவனத் தொடர்பாடல்***

**(a)**

**அதிகாரம்** என்பது ஒரு நிறுவனத்திற்குள் தீர்மானம் மேற்கொள்வதற்கும் மற்றவர்களுக்கு கட்டளையிடுவதற்குமான முறைசார் உரிமையாகும், இது பொதுவாக ஒரு பதவிநிலை அல்லது வகிபாகத்தினால் வழங்கப்படுகிறது. இது நிறுவன கட்டமைப்பிலிருந்து பெறப்படுவதுடன், நிறுவனத்தின் விதிகள் மற்றும் அதிகாரச் சங்கிலி மூலம் அங்கீகரிக்கப்படுகிறது.

***(02 புள்ளிகள்)***

**வலு** என்பது முறையான அதிகாரத்தை சார்ந்திராது, மற்றவர்களின் நடத்தையில் செல்வாக்கு அல்லது கட்டுப்படுத்தும் இயலுமை ஆகும். இது நிபுணத்துவம், உறவுமுறைகள் அல்லது தனிப்பட்ட கவர்ச்சி போன்ற பல்வேறு மூலங்களில் இருந்து வருவதுடன், மேலும் நிறுவனத்திற்குள் ஒரு குறிப்பிட்ட பதவிநிலையுடன் எப்போதும் பிணைக்கப்படுவதில்லை.

***(02 புள்ளிகள்)***
***(04 புள்ளிகள்)***

**(a)** கீழே உள்ள காரணங்களில் ஏதேனும் இரண்டை அடையாளம் காணுதல் முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்

1. தரவு பகுப்பாய்வுத் திறன்கள்
2. தொழிநுட்ப-அறிவுத்திறன்
3. இணையவழிப் பாதுகாப்பு விழிப்புணர்வு
4. அனுசரிக்கும் இயலுமை
5. தன்னியக்கமாக்கல் அறிவு
6. முன்னிலைப்படுத்தல் (Presentation) திறன்கள்

***(02 புள்ளிகள்)***

**(b)** கீழே உள்ள ஏதேனும் இரண்டு காரணங்களை விளக்கினால் முழுமையான புள்ளிகள் கிடைக்கும்

1. தொடர்பாடலானது, ஊழியர்களுக்கு செய்ய வேண்டிய நடைமுறை, அவற்றை செயற்படுத்தும் விதம் தொடர்பில் கூறித் தெளிவுபடுத்துவதுடன், சுட்டிக்காட்டப்பட்ட அளவிற்கு இல்லாதபோது அவர்களின் வினைத்திறனை எவ்வாறு மேம்படுத்துவது என்பதைப் பற்றி விளக்கி ஊக்குவிக்கிறது.

2. தொடர்பாடலானது நடவடிக்கைகளின் மாற்றுப் போக்கைத் தீர்மானிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் உதவுவதன் காரணமாக தீர்மானம் மேற்கொள்ளும் நடைமுறைக்கான வணிகப் பங்காளிகளுக்கான தகவல்களின் மூலமாகும்.

3. தனிநபரின் நடத்தையை மாற்றுவதில் தொடர்பாடல் முக்கியப் பங்காற்றுகிறது, அதாவது, நன்கு தகவலறிந்த ஒரு நபர், குறைவான தகவலறிந்த நபரை விட சிறந்த மனநிலையைக் கொண்டிருப்பார். நிறுவனத்தின் பிரசுரங்கள், வெளியீடுகள், மாநாடுகள் மற்றும் பல்வேறு வகையான மற்றும் பிரசுரிக்கப்பட்ட தொடர்பாடல்கள் ஆகியவை ஊழியரின் நடத்தையை மேம்படுத்த உதவுகின்றன.

4. தொடர்பாடலானது இருவழி ஊடாடலை அனுமதிக்கிறது. இன்றைய வாழ்க்கையில் மற்றொரு தனிநபரின் காணப்படுகை மட்டுமே ஊடாடலை ஊக்குவிக்கிறது. ஊடாடல் இன்றி ஒருவரால் நிலைத்திருக்க முடியாது என்றும் கூறப்படுகிறது.

5. முன்னர் குறிப்பிட்டது போல, ஊடாடலானது செயன்முறையை முகாமை செய்யவும் உதவுகிறது. வணிக உறுப்பினர்களின் நடத்தையை பல்வேறு வழிகளில் முகாமை செய்ய இது அனுமதிக்கிறது. ஒரு நிறுவனத்தில் ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய பல்வேறு மட்டங்கள் மற்றும் சில எண்ணக்கருக்கள் மற்றும் பரிந்துரைகள் காணப்படுகின்றன. அவர்கள் வணிக வழிகாட்டுதல்களை கடைப்பிடித்து, தங்கள் வேலைப் பகுதியை வினைத்திறனாக செயற்படுத்துவதுடன், ஏதேனும் வேலை பிரச்சனை மற்றும் முறைப்பாடுகள் தொடர்பில் அவர்களது மேலதிகாரிகளுடன் தொடர்பாட வேண்டும். எனவே, ஊடாடல் கட்டுப்பாட்டு செயற்பாட்டை முகாமை செய்ய அனுமதிக்கிறது.

aat SRI LANKA

6. பின்னூட்டம் மற்றும் மேம்பாடு: பயனர்களிடமிருந்து பின்னூட்டங்களுக்கான ஒரு வழிமுறையை வழங்கி, முறைமையை செம்மைப்படுத்தவும் மேம்படுத்தவும் உதவும் வகையில் செயற்பாட்டின் ஆரம்பத்தில் பிரச்சினைகளை அடையாளம் காணவும் தீர்க்கவும் அனுமதிக்கிறது.

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 03 - செயற்பாட்டு முகாமை*

**(a)** கீழே உள்ள செயற்பாடுகளில் ஏதேனும் இரண்டை விளக்குவது முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்:

1. **தர முகாமை**: தரக் கட்டுப்பாடு, தர உத்தரவாதம் மற்றும் தொடர்ச்சியான விருத்தி நடைமுறைகள் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை பராமரிப்பதிலும் மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்துகிறது.
2. **இயலளவுத் திட்டமிடல்**: உற்பத்திக்கான கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கும், செயற்பாடுகள் தற்போதைய மற்றும் எதிர்கால பணிச்சுமைகளைக் கையாளும் என்பதை உறுதி செய்வதற்கும் உபகரணங்கள் மற்றும் ஊழியர்கள் போன்ற தேவையான வளங்களைத் தீர்மானித்தல்.
3. **உற்பத்தி வரிசைப்படுத்தல்**: உற்பத்திகள் சரியான நேரத்தில் உற்பத்தி செய்யப்படுவதையும், வளங்களின் பயன்பாட்டை மேம்படுத்தி, கேள்வியைப் பூர்த்தி செய்வதையும் உறுதி செய்வதற்காக உற்பத்தி நடவடிக்கைகளை திட்டமிடுதல் மற்றும் ஒழுங்கமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
4. **வசதி (தளவமைப்பு) முகாமை**: வசதிகள் பராமரிக்கப்படுவதையும், பாதுகாப்பானதாக, மற்றும் வினைத்திறனான செயற்பாடுகளுக்கு உகந்ததாக இருப்பதையும் உறுதி செய்யும் வகையில் பௌதீக வேலை இடம் மற்றும் உபகரணங்களை முகாமை செய்வதில் கவனம் செலுத்துகிறது.
5. **கேள்வியை எதிர்வுகூறல்**: சந்தையில் விற்பனை செய்யும் நோக்கத்திற்காகவே உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, உற்பத்தி அளவானது சந்தைக் கேள்வியைப் பிரதிபலிக்க வேண்டும். எனவே எத்தனை தொகுதிகள் அல்லது அலகுகள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பது குறித்து துல்லியமாக இருக்க, உற்பத்தித் திட்டத்தை முடிவு செய்ய வேண்டும்.

*(04 புள்ளிகள்)*

**(b)** கீழே உள்ள முக்கியத்துவங்களில் ஏதேனும் இரண்டை விளக்குவது முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்

aat SRI LANKA

1. **கிரயக் குறைப்பு**: வினைத்திறனான வழங்கல் சங்கிலி முகாமையானது கொள்வனவு, உற்பத்தி, மற்றும் ஒழுங்கமைப்பு செயன்முறைகளை மேம்படுத்துதல் மற்றும் வழங்குனர்களுடன் சிறந்த விதிமுறைகளைப் பேரம்பேசுதல் தொடர்பான செலவுகளைக் குறைக்க உதவுகிறது.

2. **மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் திருப்தி**: இருப்புக்களை வினைத்திறனாக முகாமை செய்தல் மற்றும் வழங்குனர்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் உற்பத்திகள் மற்றும் சேவைகளை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதிசெய்கிறது. இது அதிக வாடிக்கையாளர் திருப்தி மற்றும் விசுவாசத்திற்கு வழிவகுக்கிறது.

3. **மேம்படுத்தப்பட்ட வினைத்திறன்**: வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதன் மூலம் செயற்பாடுகளை நெறிப்படுத்துகிறது. இதன் விளைவாக வேகமான உற்பத்தி சுற்றோட்டங்கள் மற்றும் முதன்மைக் காலங்கள் குறைக்கப்படுகின்றன.

4. **இடர் முகாமை**: நிலையான திட்டங்களை உருவாக்கி நம்பகமான பங்காளிகளுடன் வலுவான உறவுமுறைகளை உருவாக்குவதன் மூலம் வழங்குனர் தோல்விகள் அல்லது ஒழுங்கமைத்தல் சிக்கல்கள் போன்ற விநியோக இடையூறுகளுடன் தொடர்புடைய இடர்களைக் கண்டறிந்து குறைக்கிறது.

5. **சிறந்த தெரிநிலை மற்றும் நுண்ணறிவுகளைப் பெறுதல்**: பயனுறுதிமிக்க வழங்கல் சங்கிலி முகாமையின் மிகப்பெரிய நன்மைகளில் ஒன்று, இது அதிகத் தெரிவுநிலையை வழங்குவதுடன், வணிகத்தைக் கட்டுப்படுத்துகிறது. இது வழங்கல் சங்கிலியில் தகவலின் பாய்ச்சலை மேம்படுத்துவதுடன், வணிகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பொருட்கள் பாய்ச்சலடையும்போது இடர்களைத் தணிக்கவும், எதிர்பாராத இடையூறுகளுக்கு விரைவாக துலங்கலளிக்கவும் உதவுகிறது.

6. **சிறந்த கொள்வனவுத் தீர்மானம் மேற்கொள்ளல்**: இது மூலப்பொருட்கள் மற்றும் முடிவுப் பொருட்களின் கொள்வனவில் சிறந்த தீர்மானங்களுக்கு வசதியளிக்கிறது. இது வழங்கல் சங்கிலியில் தகவலின் பாய்ச்சலை மேம்படுத்துவதுடன், வணிகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பொருட்கள் பாய்ச்சலடையும்போது இடர்களைத் தணிக்கவும், எதிர்பாராத இடையூறுகளுக்கு விரைவாக துலங்கலளிக்கவும் உதவுகிறது.

7. **விற்பனை மற்றும் இலாபத் தன்மையை அதிகரித்தல்**: வாடிக்கையாளர்களின் திருப்தி காணப்பட்டால், அது விற்பனையை அதிகரிக்கும். மேலும் பயனுறுதிமிக்க வழங்கல் சங்கிலி முகாமையானது செலவுகளைக் குறைப்பதை உறுதி செய்கிறது. வியாபாரத்தில் இறுதியில் இலாபம் அதிகரிக்கும்.

***(04 புள்ளிகள்)***



aat SRI LANKA

**(c)**

| அம்சம் | பொருட்கள் | சேவைகள் |
|---|---|---|
| பௌதீகத் தன்மை | பிற்கால நுகர்வுக்காக தொட்டு சேமித்து வைக்கக்கூடிய பௌதீகப் பொருட்கள் | பௌதீகமற்றது மற்றும் தொடவோ அல்லது பிற்கால நுகர்வுக்காக சேமிக்கவோ முடியாது. |
| உற்பத்தி மற்றும் நுகர்வு | உற்பத்தி, சேமித்து வைத்தல் மற்றும் நுகர்வு ஆகியன வேறுவேறாக இடம்பெறும். | உற்பத்தி மற்றும் நுகர்வு ஒரே நேரத்தில் இடம்பெறும். |
| நியமமாக்கல் | நியமப்படுத்தப்பட்டு பெருமளவில் உற்பத்தி செய்யப்படும். | பெரும்பாலும் தனிப்பயனாக்கப்பட்டது, மாறுபாட்டிற்கு வழிவகுக்கிறது |
| உரிமை | உரிமையானது கொள்வனவு செய்தவுடன் மாற்றப்படும் | எந்த உரிமையும் மாற்றப் படுவதில்லை, அணுகல் அல்லது அனுபவம் வழங்கப்படும் |

*(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 05 - மனித வள முகாமை*

**(a)** கீழே உள்ள மூன்றில் ஏதேனும் ஒரு முக்கியத்துவத்தை விளக்குவது முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்

1. **நிறுவன இலக்குகளை அடைவதற்கான மிக முக்கியமான வளம்**: நிறுவனத்தில் பல்வேறு வகையான வளங்கள் உள்ளன. மற்ற அனைத்து வளங்களின் கிடைக்கும் தன்மை, நிறுவனத்தின் இலக்குகளை நிறைவேற்றும் திறனைக் கொண்டிருக்க மனித வளம் மட்டுமே இலக்குகளை நிறைவேற்றுகிறது.

2. **திறன் கையகப்படுத்தல் மற்றும் தக்கவைத்தல்:** மனிதவள முகாமையானது திறமையான ஊழியர்களை ஈர்க்கவும், ஆட்சேர்ப்பு செய்யவும் மற்றும் தக்கவைத்துக் கொள்ளவும் உதவுவதன் மூலம், நிறுவனம் அதன் இலக்குகளை அடைய மற்றும் போட்டித்தன்மையுடன் இருக்கத் தேவையான திறமையைக் கொண்டுள்ளதை உறுதி செய்கிறது.

3. **ஊழியர் விருத்தி மற்றும் செயற்திறன்**: மனிதவள முகாமையானது பயிற்சி மற்றும் விருத்தித் திட்டங்கள், செயற்திறன் மதிப்பீடுகள் மற்றும் தொழில் முன்னேற்ற வாய்ப்புகளை எளிதாக்கி, ஊழியர் திறன், உற்பத்தித்திறன் மற்றும் வேலை திருப்தி ஆகியவற்றை மேம்படுத்துகிறது.

aat SRI LANKA

4. **இணக்கப்பாடு மற்றும் இடர் முகாமை:** மனிதவள முகாமையானது ஊழியர் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை கடைபிடிப்பதை உறுதி செய்து, சட்ட சிக்கல்களின் இடரைக் குறைத்து பாதுகாப்பான, நியாயமான மற்றும் இணக்கமான பணிச்சூழலை மேம்படுத்துகிறது.

5. **நிறுவன கலாச்சாரம் மற்றும் ஊழியர் ஈடுபாடு:** நிறுவன கலாச்சாரத்தை வடிவமைத்தல் மற்றும் பராமரித்தல், நேர்க்கணிய பணிச்சூழலை வளர்ப்பது மற்றும் ஊழியர் ஈடுபாடு மற்றும் ஊக்கத்தை அதிகரிப்பதில் மனிதவள முகாமை முக்கிய பங்கு வகிக்கிறது.

6. **இழப்பீடு மற்றும் பலன்கள் முகாமை**: மனிதவள முகாமையானது இழப்பீட்டு கட்டமைப்புகள், பயன் திட்டங்கள் மற்றும் வெகுமதி முறைமைகளை நிர்வகிக்கிறது, ஊழியர்களுக்கான நியாயமான ஊதியம் மற்றும் ஊக்கமளிப்பதை உறுதிசெய்து, தக்கவைப்பு மற்றும் வேலை திருப்தியை மேம்படுத்துகிறது.

7. **ஒவ்வொரு முகாமையாளரதும் முக்கிய பொறுப்பு**: அனைத்து செயற்பாட்டு முகாமையாளர்களும் அவர்கள் மக்களுடன் பணியாற்ற வேண்டியிருப்பதுடன், ஒரு நிறுவனத்தில் உள்ளவர்களைக் கொண்டு பணிகளைச் செய்வித்தல் வேண்டும் என்பதால் அவர்கள் மனிதவள முகாமையில் போதுமான அளவு திறன் பெற்றிருக்க வேண்டும். இது நேரடியாக அவர்களின் செயற்பாட்டுப் பகுதிகளில் வெற்றியைப் பொறுத்தது.

***(06 புள்ளிகள்)***

**(b)** கீழே உள்ள முக்கியத்துவங்களில் ஏதேனும் ஒன்றைக் கண்டறிவது முழு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்

1. பயனுறுதிமிக்க ஊக்குவித்தல் மற்றும் வெகுமதி முறைமைகள் மூலம் ஊழியர் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
2. சிறந்த தொடர்பாடல், ஒத்துழைப்பை வளர்ப்பதுடன் மற்றும் தவறான புரிதல்களை குறைக்கிறது.
3. பயனுறுதிமிக்க முகாமை மற்றும் தலைமைத்துவ நடைமுறைகளை உருவாக்க உதவுதல்.
4. ஊழியர் திருப்தி மற்றும் தக்கவைப்பை மேம்படுத்துதல்.
5. மோதல்களை மிகவும் பயனுறுதி மிக்க வகையில் கண்டறிந்து தீர்த்தல்.
6. மக்கள், நிறுவன மற்றும் சமூக நோக்கங்களை அடைவதன் மூலம் சிறந்த உறவை உருவாக்குதல்.
7. நடத்தை, பயிற்சி மற்றும் விருத்தி, மாற்ற முகாமை, தலைமைத்துவம் மற்றும் அணிகள் போன்ற மனித வளங்களின் பரந்த வரிசையை உள்ளடக்கியிருத்தல்.
8. முகாமையின் சாராம்சமான ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.
9. நிறுவனத்தின் நன்மதிப்பை மேம்படுத்துதல்.

aat SRI LANKA

10. இலக்குகளை விரைவாக அடைய உதவுதல்.

11. வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தல்.

12. ஊக்குவித்தலுக்கு வசதியளித்தல்.

13. அதிகரித்த வினைத்திறனுக்கு வழிவகுத்தல்.

14. நிறுவனத்தில் உறவுமுறைகளை மேம்படுத்துதல்.

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 04 - சந்தைப்படுத்தல் முகாமை***
***அத்தியாயம் 07 – தந்திரோபாய முகாமைக்கான அறிமுகம்***

**(a)**

**சந்தைத் துண்டமாக்கல்:** ஒரு பரந்த சந்தையை ஒரே மாதிரியான தேவைகள், பண்புகள் அல்லது நடத்தைகளைக் கொண்ட நுகர்வோரின் சிறிய, வேறுபட்ட குழுக்களாகப் பிரிக்கும் செயன்முறை. இது குறிப்பிட்ட குழுக்களை மிகவும் திறம்பட குறிவைக்க வணிகங்களை அனுமதிக்கிறது.

*(1.5 புள்ளிகள்)*

**நிலைப்படுத்தல்:** இலக்கு சந்தைப் பிரிவுகளின் மனதில் ஒரு உற்பத்தி அல்லது பண்டக்குறியின் தனித்துவமான விம்பத்தை அல்லது உணர்வை உருவாக்குவதற்கான ஒரு உத்தியை வடிவமைத்து செயற்படுத்தும் செயன்முறை. போட்டியாளர்களுடன் ஒப்பிடும்போது ஒரு உற்பத்தி எவ்வாறு உணரப்படுகிறது என்பதில் கவனம் செலுத்துகிறது.

*(1.5 புள்ளிகள்)*
*(மொத்தம் 03 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(b) கீழே உள்ள முக்கியத்துவங்களில் ஏதேனும் இரண்டை விளக்குவது முழு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்**

1. **கிரய வினைத்திறன்:** சமூக ஊடகங்கள் மற்றும் மின்னஞ்சல் பிரச்சாரங்கள் போன்ற எண்ணியல் சந்தைப்படுத்தல் முறைகள் பெரும்பாலும் பாரம்பரிய விளம்பரங்களை விட குறைந்த கிரயம் மற்றும் முதலீட்டில் அதிக திரும்பலை வழங்குகிறது.

2. **இலக்கு அடைவு**: மக்கள்தொகை, ஆர்வங்கள் மற்றும் நடத்தைகளின் அடிப்படையில் குறிப்பிட்ட பார்வையாளர்களின் துல்லியமான இலக்கை செயற்படுத்தி, சந்தைப்படுத்தல் முயற்சிகள் மிகவும் பொருத்தமான வாடிக்கையாளர்களை சென்றடைவதை உறுதி செய்கிறது.

3. **அளவிடக்கூடிய பெறுபேறுகள்**: விரிவான பகுப்பாய்வு மற்றும் செயற்திறன் அளவீடுகளை வழங்கி, பிரச்சாரத்தின் செயற்திறனைக் கண்காணிக்கவும், தரவு சார்ந்த தீர்மானங்களை மேற்கொள்ளவும், நிகழ்நேர தந்திரோபாயங்களை மேம்படுத்தவும் வணிகங்களை அனுமதிக்கிறது.

4. **மேம்படுத்தப்பட்ட ஈடுபாடு**: சமூக ஊடகங்கள், வலைப்பதிவுகள் மற்றும் மின்னஞ்சல் போன்ற வேறுபட்ட வழிமுறைகள் மூலம் வாடிக்கையாளர்களுடன் நேரடி தொடர்புகளை எளிதாக்கி, வலுவான உறவுமுறைகளை வளர்ப்பதுடன், பண்டக்குறி விசுவாசத்தையும் அதிகரிக்கிறது.

5. **தனிப்பயனாக்கம்**: வாடிக்கையாளர் தரவுத்தளம் வணிக வலைத்தளத்துடன் இணைக்கப்பட்டிருந்தால், அந்தத் தளத்தை யாராவது பார்வையிடும் போதெல்லாம், வணிகம் அவர்களை இலக்குச் சலுகைகளுடன் வரவேற்கலாம். அவர்கள் வணிகத்திலிருந்து எவ்வளவு அதிகமாக வாங்குகிறார்களோ, அவ்வளவு அதிகமாக வணிகமானது அவர்களின் வாடிக்கையாளர் சுயவிவரத்தையும் சந்தையையும் பயனுறுதி மிக்க வகையில் செம்மைப்படுத்த முடியும்.

6. **வெளிப்படைத்தன்மை**: சமூக ஊடகங்களில் ஈடுபட்டு அதை கவனமாக முகாமை செய்வதன் மூலம், வணிகம் தனது வாடிக்கையாளர் விசுவாசத்தை உருவாக்கி, எளிதில் ஈடுபடுவதற்கான நற்பெயரை உருவாக்க முடியும்.

7. **சமூக நாணயம்**: எண்ணியல் சந்தைப்படுத்தலானது உள்ளடக்க சந்தைப்படுத்தல் தந்திரங்களைப் பயன்படுத்தி ஈடுபாடு மிக்க பிரச்சாரங்களை உருவாக்க வணிகத்தை அனுமதிக்கிறது. இந்த உள்ளடக்கம் (படங்கள், காணொளிகள், கட்டுரைகள்) சமூக நாணயத்தைப் பெறலாம் - பயனரிடமிருந்து பயனருக்கு அனுப்பப்பட்டு வைரலாகிறது

8. **மேம்படுத்தப்பட்ட மாற்று விகிதங்கள்**: வணிகத்திற்கு இணையதளம் இருந்தால், அதன் வாடிக்கையாளர்கள் கொள்வனவை மேற்கொள்ள சில சொடக்குகள் மட்டுமே இருக்கும். மக்கள் எழுந்து தொலைபேசி அழைப்பை மேற்கொள்ள அல்லது கடைக்குச் செல்ல வேண்டிய பிற தேவை காணப்படும் ஊடகங்களைப் போலல்லாமல், எண்ணியல் சந்தைப்படுத்தல் தடையின்றி உடனடியாக செயற்படுத்தத் தக்கதாக இருக்கும்.

*(04 புள்ளிகள்)*

**(c)**

வேறுபடுத்தல் தந்திரோபாயம் என்பது ஒரு வணிகம் அதன் உற்பத்திகள் அல்லது சேவைகளை போட்டியாளர்களிடமிருந்து தனித்துவமான பண்புகளை அல்லது உயர்ந்த மதிப்பை வழங்குவதன் மூலம் வேறுபடுத்த முற்படும் ஒரு வணிக அணுகுமுறையாகும். புத்தாக்கம், உயர்தர அம்சங்கள், விதிவிலக்கான வாடிக்கையாளர் சேவை அல்லது தனித்துவமான பண்டக்குறியிடல் மூலம் இதை அடைய முடியும். உயர்தர விலைகளை வசூலிக்க நிறுவனத்தை அனுமதிக்கும் ஒரு போட்டி நன்மையை உருவாக்குவது மற்றும் அந்த தனித்துவமான அம்சங்களை மதிக்கும் வாடிக்கையாளர்களின் குறிப்பிட்ட பிரிவை ஈர்ப்பதே இதன் குறிக்கோள் ஆகும்.

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

*பிரிவு **B** முடிவு*

SRI LANKA

(மொத்தம் 25 புள்ளிகள்))

**பிரிவு - C**

## *வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 02 – முகாமைத்துவ செயன்முறையின் தொழிற்பாடுகள் - தலைமைத்துவம்***

**(a)** கீழே உள்ள முக்கியத்துவங்களில் ஏதேனும் ஒன்றை விளக்கினால் முழுமையான புள்ளிகள் வழங்கப்படலாம்.

1. **நம்பிக்கை மற்றும் மன உறுதியை மீட்டெடுத்தல்**: பயனுறுதி மிக்க தலைமைத்துவமானது ஊழியர்கள் மற்றும் அக்கறைதாரர்களிடையே நம்பிக்கையை மீண்டும் பெற உதவுகிறது, குறிப்பாக தலைமைத்துவ மாற்றம் மற்றும் நிதிசார் இடர்நிலைகளின் போது முக்கியமானது. இது மன உறுதியை அதிகரிப்பதுடன், ஊழியர்களை ஒரு பொதுவான இலக்கை நோக்கி சீரமைக்கிறது.

2. **நிலைமாற்றத்தை செயற்படுத்தல்**: தொழிற்பாட்டு வினைத் திறனின்மை மற்றும் குறைந்து வரும் செயற்திறனை விமானசேவை நிறுவனம் எதிர்கொள்ளும் நிலையில், நிறுவனத்தை மாற்றும் பயணத்தின் மூலம் வழிநடத்தவும், தந்திரோபாய மாற்றங்களைச் செயற்படுத்தவும், ஒட்டுமொத்த செயற்திறனை மேம்படுத்தவும் வலுவான தலைமைத்துவம் அவசியமாகும்.

3. **பொறுப்புக்கூறலை மேம்படுத்துதல்**: நெறிமுறைமிக்க தலைமைத்துவமானது பொறுப்புக்கூறலை உறுதிசெய்து, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமைப்பாடுமிக்க கலாச்சாரத்தை வளர்க்கிறது. கடந்த கால சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் நேர்க்கணிய நற்பெயரை உருவாக்குவதற்கும் இது இன்றியமையாதது.

4. **தந்திரோபாய மாற்றங்களைச் செயற்படுத்துதல்:** பயனுறுதி மிக்க தலைவர்கள், மீள் வரையறை செய்யப்பட்ட சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் மற்றும் மேம்பட்ட செயற்பாட்டு நடைமுறைகள் போன்ற தந்திரோபாய மாற்றங்களை வெற்றிகரமாக இயக்கி முகாமை செய்யலாம். இந்த மாற்றங்கள் நிறுவனம் சுமூகமாகவும் வினைத்திறனாகவும் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்கிறது.

5. **புதுமை மற்றும் திறனை வளர்த்தல்**: ஊழியர்களின் திறன்களை மேம்படுத்த பயிற்சி மற்றும் விருத்தித் திட்டங்களை மறுசீரமைப்பதில் தலைமைத்துவம் முக்கிய பங்கு வகிக்கிறது. இது புதுமைகளை ஊக்குவித்து போட்டிமிக்க விமானத்துறைக்கு ஏற்றவாறு தொழிற்பட விமான நிறுவனத்திற்கு உதவுகிறது.

6. **வணிகம் அதன் தூரநோக்கைப் பேணுவதை உறுதிப்படுத்தல்**: வணிகத்தில் மனித சக்திகள் இந்த இயக்கத்தை நோக்கி வேலை செய்ய வேண்டும். இதை வினைத்தினான முறையில் செய்வதற்கு, சரியான தலைமைத்துவம் ஊழியர்கள் சரியான பாதையில் வழிநடத்தப்படுவதை உறுதி செய்யும்.

7. **பன்முகத்தன்மையைத் தழுவ நிறுவனத்தை வழிநடத்துதல்**: ஒரு நல்ல தலைவர் தனது

குழுவை பன்முகத்தன்மையை நோக்கி வழிநடத்தி அதன் மூலம் நிறுவனம் பன்முகத்தன்மைக்கு மத்தியில் சரியான பாதையில் நகர்வதை உறுதிசெய்வார்.

8. **புதிய தந்திரோபாயத் திசைகளைத் தொடர்பாடல் செய்தல்**: சுற்றுச்சூழல் நிச்சயமற்றதன்மை மற்றும் குறைவான முற்துணிவு இயலுமை சூழ்நிலையில் நீண்டகால அபிலாசைகள், சந்தை சவால்கள் மற்றும் மாற்று நடவடிக்கைகள் அவசியமாகும். இத்தகைய சூழ்நிலைகளில், ஒரு தலைவர் தன்னையும் தனது அணியையும் தன்னம்பிக்கையுடன் வைத்துக் கொள்ளவும், இலக்குகளில் கவனம் செலுத்தவும் முடியும்.

9. **ஊழியர்கள் ஊக்குவிக்கப்பட்டவர்களாக இருப்பதை உறுதிசெய்தல்**: ஒரு தலைவர் தொடர்ச்சியான தொடர்பாடல், குழுப்பணி மற்றும் பிற நோக்கங்கள் மூலம் அடையப்பட்ட இலக்குகளால் தனது குழுவை ஊக்கப்படுத்தப்பட்டதாக வைத்திருக்க முடியும்.

10. **அவசியமான வளங்களையும் ஆதரவையும் பெறுதல்**: ஒரு தலைவர் சரியான நேரத்தில் அணிக்கு சரியான வளம் காணப்படுவதை உறுதிசெய்வார். சிரேஸ்ட முகாமையுடனான சரியான தொடர்பாடல் தந்திரோபாயத்தின் மூலம் இது சாத்தியமாகும். மேலும், ஒரு தலைவர் என்பவர் புலமைசார் மற்றும் எண்ணக்கருத் திறன்கள் விடயத்தில் ஒரு வளவாளராக இருப்பார்.

11. **தொடர்ச்சியான கற்றலை ஊக்குவித்தல்**: ஒரு தலைவர் தனது குழுவை தொடர்ந்து ஈடுபாட்டுடன் வைத்திருந்து அவர்கள் வேலை நடைமுறைகள், சட்டப்பூர்வ மற்றும் வணிகத்தில் இருந்து காலாவதியாகாத நடைறைகளைக் கற்றல் மற்றும் தேவைகள் மற்றும் போட்டி நன்மைகளுக்கு இயைபானவர்களாகக் காணப்படுவதை உறுதிசெய்வார்.

12. **ஒரு கூட்டு அடையாளத்தை ஊக்குவித்தல்**: ஒரு தலைவர் தனக்காக அல்லாது, அணிக்காகவே வேலை செய்கிறார். குழு முயற்சியை வெற்றியடையச் செய்வதன் மூலம், தலைவர் அந்த நன்மதிப்பை அணியுடன் பகிர்ந்து கொள்கிறார். இந்த ஆர்வம் குழு மனப்பான்மை மற்றும் குழுப்பணிக்கான தனித்துவமான அடையாளத்தை ஊக்குவிக்கும்.

***(06 புள்ளிகள்)***

***அத்தியாயம் 05 - மனித வள முகாமை***

**(b)** கீழே உள்ள முக்கியத்துவங்களில் ஏதேனும் மூன்றை விளக்குவது முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்.

1. **ஊழியர்களின் மனஉறுதியை மேம்படுத்துதல்:** ஊழியருக்கு வேலை பாதுகாப்பு மற்றும் வேலை திருப்தியை வழங்க பயிற்சியளித்தல் உதவுகிறது. ஆதிக திருப்தியடைந்த ஊழியரது மன உறுதியும் அதிகமாக இருந்தால், அவர் நிறுவன வெற்றிக்கு பங்களிப்பதுடன், மேலும் ஊழியரது வரவின்மை மற்றும் புரள்வு குறைவாக இருக்கும்.

aat SRI LANKA

2. **குறைவான மேற்பார்வை**: நன்கு பயிற்சி பெற்ற ஒரு ஊழியர் வேலையை நன்கு அறிந்தவராக இருப்பதுடன், குறைவான மேற்பார்வையே தேவைப்படும். இதனால், நேர விரயமும், ஊழியத் தேவையும் குறையும்.

3. **குறைவான விபத்துக்கள்**: ஊழியர்களுக்கு ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்கள் இல்லாவிட்டால் பிழைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒரு ஊழியர் அதிக பயிற்சி பெற்றவராக இருந்தால், வேலையில் விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகும்.

4. **பதவி உயர்வுக்கான வாய்ப்புகள்**: ஊழியர்கள் பயிற்சியின் போது திறன்களையும் தகமையையும் பெறுகிறார்கள். அவர்கள் பதவி உயர்வுக்கு அதிக தகுதி பெறுகிறார்கள். அவர்கள் நஜறுவனத்தின் பெறுமதிமிக்க சொத்தாக மாறிவிடுவர்.

5. **அதிகரித்த உற்பத்தித்திறன்:** பயிற்சியளித்தலானது ஊழியர்களின் திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துகிறது. நன்கு பயிற்சி பெற்ற ஊழியர்கள் அளவு மற்றும் தரமான செயற்திறன் பெறுபேற்றைக் காட்டுவார்கள். ஊழியர்கள் முறையாக பயிற்சி பெற்றால் நேரம், பணம் மற்றும் வளங்கள் விரயமாவது குறைவாகும்.

6. **தொடர்ச்சியான கற்றலை ஊக்குவித்தல்**: தொடர்ச்சியாக வளர்ச்சி வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் புதுமைகளின் கலாச்சாரத்தை வளர்க்கும் தொழிற்துறை போக்குகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் தொடர்ந்து புதுப்பித்த நிலையில் இருக்க ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

***(06 புள்ளிகள்)***

***அத்தியாயம் 04 - சந்தைப்படுத்தல் முகாமை***

**(c)** கீழே உள்ள முக்கியத்துவங்களில் ஏதேனும் மூன்றை விளக்குவது முழுமையான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும்

1. **பரந்துபட்ட சந்தை அடைவு**: பல்வேறு வயதுக் குழுக்கள், கலாச்சாரங்கள் மற்றும் பிராந்தியங்கள் உட்பட பல்வேறு மக்கள்தொகைப் பிரிவுகளைக் கவர்வதன் மூலம், விமான நிறுவனம் தனது சந்தை எல்லையை விரிவுபடுத்தி, பெரிய, மாறுபட்ட வாடிக்கையாளர் தளத்தை ஈர்க்க முடியும்.

2. **அதிகரித்த பண்டக்குறி விசுவாசம்**: பலதரப்பட்ட பார்வையாளர்களுடன் எதிரொலிக்கும் ஒரு பண்டக்குறி பல்வேறு பிரிவுகளில் வலுவான வாடிக்கையாளர் விசுவாசத்தை உருவாக்க முடியும். பல்வேறு தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் பண்டக்குறி செய்தியை உருவாக்குவது வாடிக்கையாளர்களுடன் நீடித்த உறவுகளை உருவாக்க உதவுகிறது.

3. **மேம்படுத்தப்பட்ட போட்டி நன்மை**: பரந்த அளவிலான வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யும் இடமாற்றம் செய்யப்பட்ட பண்டக்குறி மூலம் விமான நிறுவனத்தை வேறுபடுத்துவது

SRI LANKA

நெரிசலான விமான சந்தையில் குறிப்பிடத்தக்க போட்டித்தன்மையை வழங்க முடியும், இதனால் பீகாக் ஏர்லைன்ஸ் போட்டியாளர்களிடமிருந்து தனித்து நிற்கிறது.

4. **வருமான வளர்ச்சி**: பலதரப்பட்ட வாடிக்கையாளர் தளம் அதிகரித்து பயணச்சீட்டு விற்பனை மற்றும் அதிக வருவாய்க்கு வழிவகுக்கும். பல்வேறு தேவைகள் மற்றும் விருப்பங்களை வழங்குவதன் மூலம், விமான நிறுவனம் புதிய வருவாய் தளங்களைப் பயன்படுத்தி பல்வேறு சந்தைப் பிரிவுகளுக்கான விலையிடல் தந்திரோபாயங்களை மேம்படுத்தலாம்.

5. **மேம்படுத்தப்பட்ட பண்டக்குறி உணர்வு**: பண்டக்குறிகளை உள்ளடக்கிய மற்றும் உயர்தரமாகப் பார்க்க வெற்றிகரமாக மாற்றியமைப்பது ஒட்டுமொத்த பண்டக்குறி உணர்வை மேம்படுத்துகிறது. இந்த நேர்க்கணிய விம்பம் அதிக மதிப்புள்ள வாடிக்கையாளர்களை ஈர்த்து உலக சந்தையில் விமான நிறுவனத்தின் நற்பெயரை மேம்படுத்தும்.

6. **போட்டியை வினைத்திறன் மற்றும் பயனுறுதி மிக்க வகையில் எதிர்கொள்ளுதல்**: இடமாற்றம் செய்வதன் மூலம் அதன் போட்டியாளர்களைப் புரிந்து கொள்ள உதவுவதுடன், சந்தையில் போட்டியை எதிர்கொள்ளும் தந்திரோபாயங்களை உருவாக்கலாம்.

***(06 புள்ளிகள்)***

***அத்தியாயம் 07 - மூலோபாய முகாமை அறிமுகம்***

**(d)** கீழே உள்ள முக்கியத்துவங்களில் ஏதேனும் இரண்டை விளக்கினால் முழுமையான புள்ளிகள் கிடைக்கும்:

1. **வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களைக் கண்டறிதல்**: வளர்ந்து வரும் சந்தைகள் அல்லது தொழிநுட்ப முன்னேற்றங்கள் மற்றும் பொருளாதார வீழ்ச்சிகள் அல்லது அதிகரித்த போட்டி போன்ற அச்சுறுத்தல்கள் போன்ற வெளிப்புற வாய்ப்புகளை அடையாளம் காண சுற்றுச்சூழல் பகுப்பாய்வு உதவுகிறது. இந்த அறிவு பீகாக் ஏர்லைன்ஸ் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் அச்சுறுத்தல்களைத் தணிக்கவுமான தந்திரோபாயங்களை உருவாக்கவும் அனுமதிக்கிறது.

2. **சந்தைப் போக்குகளைப் புரிந்துகொள்ளல்**: சுற்றுச்சூழல் காரணிகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம், சந்தைப் போக்குகள், வாடிக்கையாளர் விருப்பத்தேர்வுகள் மற்றும் தொழில் வளர்ச்சிகள் குறித்து விமான நிறுவனம் தொடர்ந்து தகவலறிய முடியும். தற்போதைய மற்றும் எதிர்கால சந்தை தேவைகளுக்கு ஏற்ப நிறுவனம் அதன் தந்திரோபாயங் மற்றும் சலுகைகளை சீராக்க இது உதவுகிறது.

3. **தகவலறிந்த தீர்மானம் மேற்கொள்ளல்**: வெளிப்புற சூழலை பகுப்பாய்வு செய்வது, தகவலறிந்த தீர்மானம் மேற்கொள்ளலை ஆதரிக்கும் முக்கியமான தரவு மற்றும் நுண்ணறிவுகளை வழங்குகிறது. இது யதார்த்தமான இலக்குகளை அமைப்பதற்கும், வளங்களை திறம்பட ஒதுக்குவதற்கும், வெளிப்புற சந்தைப்பரப்பைப் பற்றிய விரிவான

aat SRI LANKA

புரிதலின் அடிப்படையில் சிறந்த தந்திரோபாய விருப்பங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவுகிறது.

4. **மாற்றங்களுக்குத் தகவமைத்தல்**: விதிமுறைகள், தொழிநுட்பம் மற்றும் போட்டி நிலைமைகளில் அடிக்கடி மாற்றங்கள் கொண்டு, விமானத் தொழில் இயக்கமானது. சுற்றுச்சூழல் பகுப்பாய்வு பீக்கொக் ஏர்லைன்ஸ் இந்த மாற்றங்களுக்கு சுறுசுறுப்பாகவும் பதிலளிக்கக்கூடியதாகவும் இருக்க உதவுகிறது, அதன் தந்திரோபாயத் திட்டம் பொருத்தமானதாகவும் பயனுறுதி மிக்கதாகவும் இருப்பதை உறுதி செய்கிறது.

5. **போட்டி நன்மையை மேம்படுத்துதல்**: வெளிப்புற சூழலைப் புரிந்துகொள்ளல், பீக்கொக் ஏர்லைன்ஸ் போட்டியாளர்களுக்கு எதிராகத் தன்னைத் தானே தரப்படுத்திக்கொள்ளவும், போட்டித் தன்மையைப் பெறக்கூடிய பகுதிகளைக் கண்டறியவும் அனுமதிக்கிறது. இது விமானத்தின் பலம் மற்றும் அதன் போட்டியாளர்களுடன் தொடர்புடைய பலவீனங்களை நிவர்த்தி செய்யும் தந்திரோபாயங்களை வடிவமைக்க உதவுகிறது.

***(04 புள்ளிகள்)***

***அத்தியாயம் 07 – தந்திரோபாய முகாமை அறிமுகம்***

**(e)** 1. கூட்டுவணிக தந்திரோபாயம் (உயர் முகாமை)

2. வணிக அலகுத் தந்திரோபாயம் (நடுத்தர முகாமை)

3. செயற்பாட்டு அல்லது தொழிற்பாட்டுத் தந்திரோபாயம் (செயற்பாட்டு முகாமை):

***(03 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

SRI LANKA

*பிரிவு C முடிவு*

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*